செ.வெ.எண்: 521 நாள்: 17.09.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் மீன்வளர்ப்பினை விரிவுபடுத்திட மானியம் வழங்கப்பட உள்ளது.**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் 2021-22 இன் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ள பயனாளிகள் ஒரு ஹெக்டேருக்கு ரூ.7 இலட்சம் செலவு செய்து மீன்குளம் அமைத்திட 50 சதவீதம் மானியமாக ரூ.3.50 இலட்சம் மற்றும் ஒரு ஹெக்டேர் நீர்ப்பரப்பில் மீன்வளர்ப்பு செய்திட ஆகும் உள்ளீட்டு செலவினத்திற்கான தொகை ரூ.1.50 இலட்சத்தில் 40 சதவீதம் மானியமாக ரூ.60,000 மானியமாக வழங்கப்படும்.

மேற்படி இத்திட்டத்தில் பயன்பெற விருப்பமுள்ள மீனவ விவசாயிகள் கீழ்காணும் முகவரியில் விண்ணப்பங்களை பெற்று தகுந்த ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகம், எண்.23, லெட்சுமி நகர் முதல் வீதி, புதுக்கோட்டை. மேலும் தகவலுக்கு அலுவலக தொலைபேசி எண் 04322-220069, கைப்பேசி எண் 9384824268 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இத்திட்டத்திற்காக விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 19.09.2021 என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**